**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**

**2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 03 ம் நாள் திங்கட்கிழமை**

**E.A.No.07/2025 in E.A.No. 70/2016 in E.P.No.01/2016**

1. பீட்டர் சௌந்தர்ராஜன்
2. ஜோசப்
3. தோமையம்மாள் ... மனுதாரர்கள்/3,4,6 எதிர்மனுதாரர்கள்

**//எதிராக//**

ஜேம்ஸ் மைக்கேல்ராஜ் ... எதிர்மனுதாரர்/கோருரிமையாளர்/3 ம் நபர்

இம்மனு என் முன்பாக 29.10.2025 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.G.செந்தில்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.பரமசிவம் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பிலும் எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

**உத்தரவு**

E.A.No. 70/2016 ல் மனுதாரர்கள்/3,4,6 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக கடந்த 12.09.2025 ம் தேதி ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யவேண்டி கட்டளை 21 விதி 106 மற்றும் பிரிவு 151–உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்**

1) மனுதாரர் அசல் கோருரிமை மனுவான E.A.No. 70/2016 ல் 3 ம் எதிர்மனுதாரர் ஆவார். 4 ம் எதிர்மனுதாரர் தனது சகோதரர் என்றும், 6 ம் எதிர்மனுதாரர் தனது தாயார் என்றும் அவர்களுக்காகவும் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். கடந்த 12.09.2025 அன்று தங்கள் தரப்பில் E.A.No.70/2016 மனுவில் எதிருரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டிருந்தது என்றும் அன்றைய தினம் மனுதாரருக்கு உடல் நலம் சரியில்லாத காரணத்தால் வழக்கறிஞரை சந்தித்து எதிருரை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும் இதனால் E.A.No.70/2016 ல் மனுதாரர் மற்றும் 4,6 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி கோருரிமை மனுவில் தங்களுக்கு நல்ல எதிர்வாதம் உள்ளது என்றும் எனவே 12.09.2025 அன்று

மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பித்த ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்து இம்மனுவுடன் தாக்கல் செய்த எதிருரையை ஏற்க வேண்டுமென இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

**எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்**

2) இந்த எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். E.A.No.70/2016 மனு தாக்கல் செய்யப்பட்ட சமயத்திலேயே தரப்பினர்களாக சேர்க்கப்பட்டு அவர்களுக்கு சமூகம் நீதிமன்றம் வாயிலாக அறிவிப்பு அனுப்பப்பட்டு உரிய காலத்தில் எதிருரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டது. ஆனால் குறிப்பிட்ட காலத்திற்குள் எதிருரை தாக்கல் செய்யவில்லை. இதனால் நீதிமன்றத்தில் அவருக்கு எதிராக 12.09.2025 அன்று ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்நிலையில் மேற்படி உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென கோரி அசல் கோருரிமை மனுவை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

3) தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**தீர்வு**

4) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் நீதிமன்றத்திற்கு ஆஜராக இயலவில்லை என்றும் தங்களுக்கு இம்மனுவில் நல்ல எதிர்வாதம் இருப்பதாக வாதிடப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்திருப்பதாக வாதிட்டனர். இரு தரப்புகளின் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்கையில், 3ம் நபர்/தனி நபர் தாக்கல் செய்த புதிய மனுவில் மனுதாரர்கள் தங்கள் எதிருரையை தாக்கல் செய்து தங்கள் தரப்பின் கருத்துக்களை ஏற்க வேண்டுமென கூறுவது ஏற்கத்தக்கதாக உள்ளது. எனவே மனுதாரர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக**

இம்மனு அனுமதிக்கப்பட்டு மனுதாரர், எதிர்மனுதாரர்களுக்கு ரூ.1000/−ஐ செலவுத்தொகையாக 07.11.2025ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடியாகும் என உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 10.11.2025.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 03ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

−இல்லை−

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

−இல்லை−

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**************************************
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**
**குளித்தலை**

**E.A.No. 07/2025**
**in**
**E.A.No. 70/2016**
**in**
**E.P.No. 01/2016**

**DRAFT / FAIR ORDER**

**D.D.03.11.2025**
**************************************